உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சிதம்பரம் வெ. சா. தேவார பாடசாலை


# நிர்ணய விதிகள்.

1925

சண்முகசுந்தர விலாச பிரஸ்

சிதம்பரம்.

G1. 33741
1983




நால்வர்நற் றமிழ்மறைநானிலத் தோங்குக.

# முகவுரை.

## சிதம்பரமும் தேவாரபாடசாலையும்.

வேதவேதாந்த உபநிஷத்புராண இதிகாசங்களில் வியந்து கூறிய தகரவித்தை என்பதை விளக்குந்தானமாயும், பஞ்சகிருத்திய பரமானந்த தாண்டவேசுவர மூர்த்தியாகிய நடராஜப்பெருமான் ஞானசொருபனாய் நின்று, அருளேயுருவாகிய சிவகாமியம்மையோடும் அன்புகனிந்தொழுக, ஆன்மகோடிகட்கிரங்கி, அனவரத தாண்டவஞ் செய்தருளும் முக்கிய ஸ்தானமாயும், இதனாலேயே விராட்புருஷனது இருதயஸ்தானமென்று நூல்களாற் சிறப்பித்துச் சொல்லப்படுவதாயும், ஸ்ரீகண்டருத்திரருடைய நடனஸ்தானத்துக்கு முக்கியமாகிய கைலாசத்தை நிகர்ப்ப அவரது நடனத்துக்கமைந்த இரண்டாவது கோயிலாவது பற்றிப் பூலோக கைலாசமென்றும் தனியே கோயிலென்றும் சாஸ்திரங்களாற் புகழப்படுவதாயும் உள்ளது இச்சிதம்பர மென்னும் மகாக்ஷேத்திரமேயாம்.

இது தன்னையடைந்தவர்கட்கு இணையில்லாத அன்பையும், கல்வியையும், நடேசமூர்த்தியி னின்னருளையும், சகலநன்மைகளையும், முற்காலத் திருந்ததுபோலவே இக்காலத்தும் சாலத்தருகின்ற நடேசமகிமை வாய்ந்த மகாசிவக்ஷேத்திரமாம்.

வேதமானது ஞானத்தையும் ஞானவெளியில் நடிப்போனையும் புகழ்வதுபோலவே வேதசாரமான ஞானபாகத்தை யாவரும் நன்குணர ஸ்ரீஞானசம்பந்தர் முதலிய நால்வரும், அவர் போன்ற திருவருள் வழிப்பட்டார் பிறரும் இறைவனருள்வழி நின்று, அபேதமாய்க்கூறிய ஞானமந்திரங்களும் 'விறகிற்றீயினன் பாலிற்படுநெய்போன் மறையநின்றுளன் மாமணிச்சோதியான்' என்றற் றொடக்கத்துப் பாசுரங்களால் இறைவனைப் புகழ்தலால் வேதமும், வேதசாரத் தமிழ்வேதமும் உணர்த்தும் பொருள் ஒன்றேயென்பது வெள்ளிடை மலைபோல் விளங்கித் தோன்றும்.

திருஞானசம்பந்தமூர்த்திநாயனார் முதலிய மூவரது மனவொருப்பாட்டிற்குப் பாத்திரமானதும், நாலாவது மாணிக்கவாசகரது ஐக்கியஸ்தானமானதும், ஏனைத்திருமுறை யெல்லாம் தனக்கே நிரம்பியதும், திருமுறைகள் சேமிக்கப்பட்டிருந்ததும்

ஆன சிறப்பைநாடின், வேதமும் தமிழ்வேதமும் ஒக்கப்புகழும் உத்தமத் தானம் தில்லையே யென்பதுசெவ்விதிற் பெறப்படும்.

இத்தகைய சிதம்பர க்ஷேத்திரத்தில் தமிழ்க்கல்வியும், சம்ஸ்கிருதக் கல்வியும், வேதபாராயணமும், தமிழ்வேத பாராயணமும், சித்திபோத்ஸவமாக நிரம்பியிருக்கப் பலரும் பலகாலமும் பரிபாலித்து வந்தனர். இப்போது அநேக வருஷங்களாக இத்தமிழ்வேத பாராயணம் நித்திய நைமித்திகங்களில் எப்போதும் இடையீடின்றி இனிது நடைபெறும் பொருட்டுத் திருவெண்காட்டடிகள் பரம்பரையிற் றோன்றிய சிவநேசவம்சதிலகராகிய கானாடுகாத்தான் வெள்ளையப்ப செட்டியார், சாத்தப்பசெட்டியார்என்னும் மூலபுருஷர்களால்இவ்வூர் மேலவீதியில் ஓர் தேவாரபாடசாலை தாபிக்கப்பட்டது. இதிற்கற்கும் மாணவர்கட்கு அன்னவஸ்திராதி ஸர்வசம்ரக்ஷணைகளுக்கும் போதிய சேமநிதியும் ஏற்படுத்தப்பட்டு அவர் பரம்பரையாரால் பரிபாலிக்கப்பட்டும் வருகின்றது.

இன்னும் இத்தமிழ் வேதமாகிய திருமுறைகள் ஸ்ரீமந் நடராஜப்பெருமான் கோயிலின் கனகசபைக்குப் புறக்கடையின் பக்கத்திலே சேமிக்கப்பட்டிருந்து, பக்திபரவசனான அபயகுலசேகர சோழமகாராஜாவால் நம்பியாண்டார் நம்பியைக்கொண்டு தேடியெடுக்கப்பட்டன. பின் நடேசரனுக்கிரகப்படி பாணன் மரபிற்பிறந்த பெண்ணொருத்தியால் சிதல்வாய்க்கெஞ்சிய பதிகங்கட்குப் பண்ணடைவும் வகுக்கப்பட்டது.

அப்பண்முறைப்படி இத்தேவாரபாடசாலையில்

1. கீழ்வேளூர் சொக்கலிங்கதேசிகர்
2. திருவாரூர் சுந்தரக் குருக்கள்
3. திருவையாறு இராமசாமி ஐயர்
4. கீழ்வேளூர் சொக்கலிங்கதேசிகர்

என்பவர்களால் முறையாக ஓதுவிக்கப் பட்டுவந்து ௸ சொக்கலிங்க தேசிகரிடத்தில் பண்முறையுடன் கற்றும் ஓதியுமுணர்ந்த கணபதி அக்கிராகாரம் ப்ரம்மஸ்ரீ இலக்ஷ்மணையர் என்பவரது

தேவாரஉபாத்திமையில் 16-வருஷகாலமாகப் பிள்ளைகளுக்குத் தேவாரபாராயணஞ் செய்விக்கப்பட்டு வருகிறது. தமிழ்வேதப் பொருளை அறிந்துய்யும் பொருட்டுத் தமிழ்ப் பாடங்களும் இன்னிசையிற்பாடும் பொருட்டுச் சங்கீத பாடங்களும் தேவாரத்துடன் நடத்தப் பட்டுவருகின்றன.

இப்பாடசாலையின் நோக்கம் மாணவர்களைப்பண்முறையிலும் பொருளுணர்வகையிலும் தேவாரத்தைப்பயிற்றுவித்துச் சிதம்பராலய நித்திய தேவாரபாராயணஞ்செய்வித்தலும், தமிழுலகத்துத் தக்கபல தேவாரபாடசாலைகளை நியமித்துச் சைவசமயத்தை வளர்த்தலும், சைவப்ரதிஷ்டைபான அநேகக்ஷேத்ரால யோத்ஸவங்களிலும் தமிழ்வேதவாழ்த்தொலி தழைக்கச் செய்தலுமாம்.

---

## இனி இப்பாடசாலையின்
ஒழுக்க விதிகளின் நிர்ணயம் பின்வருமாறு;—

## 1- பாடசாலையிற் சேர்க்கப்படும் பிள்ளைகளின் யோக்கியதையும் சேர்க்கும் விதமும்.

1. இங்கே தேவாரம்படித்தற்குரியவர்கள் வேதியர்களும், ஆதிசைவராகிய குருக்களும், அபிஷேகஸ்தரென்னும் பண்டாரங்களும், சைவவேளாளர்களும், மற்றுமுள்ள சைவர்களுமாம்.

2. அம்மாணவர்கள் பன்னிரண்டு வயதுமுதல் பதினைந்து வயதுக்குட்பட்டவர்களாயிருத்தல் வேண்டும்.

3. அவர்கள் தமிழிலும் கணிதத்திலும் முறையே தமிழ் வாசகபுஸ்தகங்களைத் தெளிவாய்ப் படிக்கவும், எழுதவும், கூட்டல் கழித்தல் பெருக்கல் வகுத்தல் இவற்றின் முறைகளையும் இம்முறையில் வரும் சாதாரண கணித பரிணமங்களையும் செவ்வனே தெரிந்துகொண்டவராயிருத்தல் வேண்டும்.

4. பாடசாலையில் சேர்க்கப்படும் மாணவர்கள் இயற்கையிலேயே நல்ல சாரீர முடையவர்களாயிருத்தல் வேண்டும்.

5. அம்மாணவர்கள் நோயற்ற திடகாத்திர முடையவர்களாயிருத்தல்வேண்டும்,

6. ஷை மாணவர்கள் ஏழு ரூபாய் முன்பணங் கட்டிப் பாடசாலையிற் சேர்தல்வேண்டும்.

7. சேருகின்ற பிள்ளைகள் பெற்றோரைக்கொண்டாவது அவர்களுக்கு உத்தரவாதமான பந்துக்களைக்கொண்டாவது பாடசாலையிற் படிக்குங் காலமாகிய ஐந்துவருஷத்துக்கோ ஏழுவருஷத்துக்கோ பத்திர விதிப்படி உடன்படிக்கை எழுதிக் கொடுத்தல்வேண்டும்.

8. பாடசாலையின் உபாத்தியாயர்கள், காரியதரிசிகள், எஜமானர்கள் ஆகிய இவர்களின் அபிப்பிராயப்படி மாணவர்கள் நடத்தல்வேண்டும்.

## 2. பாடசாலையிற் சேர்க்கப்பட்ட பிள்ளைகள் அநுசரிக்கவேண்டிய பொதுவிதிகள்.

9. ஷை பிள்ளைகள் பாடசாலை ஒழுக்கப்படி அவ்விடத்திலேயே இரவும்பகலும் இருந்து பாடங்களைப்படித்தல்வேண்டும்.

10. ஷை பிள்ளைகள் ஆகாரத்தைக் கொள்ளுதற்குரிய காலவரையறையின்படி போஜனஞ்செய்தல்வேண்டும்.

11. ஷை பிள்ளைகளின் ஒழுக்கந் தவறினால் அது உபாத்தியாயரால் கவனிக்கப்பட்டு அவர்கட்கும் அதிருப்தியாயின் மேல்பார்ப்போர்க்குந் தெரிவிக்கப்படும்.

12. ஷை மாணவர்கள் எக்காரணத்தினாலோ பாடசாலையை விட்டுப்போக மூன்று தினம் ஒய்வு வேண்டுகிற பக்ஷத்தில் தேவார உபாத்தியாயரே அவர்களுக்கு விடை கொடுக்கலாம். அதற்கு மேற்பட்ட காலமாயின் அவர்சம்மதத்தோடு மேல்பார்ப்போருடைய நியமனம் பெற்றுப்போதல் வேண்டும்.

13. ஷை மாணவர்கள் உபாத்தியாயர் அநுமதித்த நாளைக் கடந்து நிற்கவேண்டிய அவசரத்தில் தக்ககாரணத்தைக் கடித மூலமாய் அறிவித்தல்வேண்டும். தக்ககாரணமின்றி நின்ற தினம் ஒன்றுக்கு அரையணா அபராதம் செலுத்தல்வேண்டும். அவ்வாறு மூன்று தினங்களுக்கு மேற்படுகிற பக்ஷத்தில் அவ்விஷயம் மேற்பார்ப்போருக்குத் தெரிவிக்கப்பட்டுச் சந்தர்ப்ப நோக்கி அபராதம் விதிக்கப்படும.

14. ஷை மாணவர் மேற்குறித்த நிலைமைக்கு மீறி நடப்பாராகில், உடன்படிக்கைப்பத்திர நிபந்தனைப்படி பாடசாலையினின்றும் நீக்கப்பட்டு, ஷை பாடசாலையிற் படித்த காலத்திற்கு நிபந்தனைப்படி ஏற்பட்ட அபராதத் தொகையை அம்மாணவர் அதிகாரிகளிடத்தில் செலுத்திவிடவேண்டும். பாடசாலையிற் சேர்ந்த காலத்திற் கட்டிய அட்வான்ஸ் ரூபாய் ஏழையும் இழத்தலுமாகும்.

15. ஷை மாணவர்கள் மாசம் ஒருமுறை முறையே தேவாரத்திலும், தமிழிலும், சங்கீதத்திலும் நடக்கும் பரீக்ஷைக்குத் தகுதியாய்ப் பழம்பாடங்களைக்கவனித்து வருதல்வேண்டும்

16. ஷை மாணவர்கள் சமயதீக்ஷையாவது பெற்றவர்களாயிருத்தல் வேண்டும்.

17. ஷை மாணவர் தினந்தோறும் கோயிலுக்குச் சென்று தேவாரத் திருத்தொண்டு செய்தல் வேண்டும்.

18. ஷை மாணவர் ஸ்ரீ நடராஜப்பெருமான் திருக்கோயிலில் தினந்தோறும் சாயங்காலத்தில் தேவாராசிரியர் நியமனப்படி பதிகநிர்ணயமுங் காலநிர்ணயமுங் கொண்டு தேவாரபாராயணஞ் செய்தல்வேண்டும்.

19. ஷை மாணவர் முதலிலும் நடுவிலும் பிரணவஸ்தானத்தில் திருச்சிற்றம்பலம் என்று சொல்லி ஓதும்பதிகத்தின் பாயிர அமைப்பையும் சொல்லிக்கொண்டு ஓதத்தொடங்கல்வேண்டும்.

20. எழுதாக் கிளவியை ஓதுதலிலும், ஓதுவித்தலிலும் பிரணவத்தை முதலில் அநுசந்தித்துச் செய்வதுபோலத் தமிழ்மறையை ஓதுதற்கண் முதலில் "தோடுடைய" என்னுந் திருஞானசம்பந்த சுவாமிகள் பதிகத்தை அநுசந்தித்தல் வேண்டும்.

21. பிரமோற்சவ காலங்களிலாவது ஆலயங்களிலாவது முறையாகத் தமிழ்வேதபாராயணம் செய்யும் பொழுது திருக்கடைக்காப்பு ஓதி அத்திருப்பதிகத்தை முடித்தபின்பே வேறு திருப்பதிகம் ஓதத்தொடங்கல் வேண்டும்.

22. திருப்பதிகங்களை அவ்வவற்றுற் குரிய பண்முறை விதிப்படி ஓதல்வேண்டும்.

23. திருப்பதிகத்தின் பத்துத் திருப்பாசுரமும் ஞாபகத்தில் இருக்கும்பொருட்டு அத்திருப்பாசுரங்களின் முதற்குறிப்பை மாணவர்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளல்வேண்டும்.

24. ஷெ மாணவர் தங்கட்கிப்பாடசாலையே அன்னசாலையுங் கல்விச்சாலையுமாதலின் இங்கேயேகுருகுல வாசமாயிருந்து பழகல்வேண்டும்.

25. ஷெ மாணவர்கள் தேவாரக் கல்விக்கு வருஷம் ஏழை மேற்கொண்டால், ஆறுவது வருஷத்தில், ஐந்து வருஷத்துக்குள் பண்முறையில் மனப்பாடம் பண்ணப்பட்ட 200 பதிகங்களுக்கு மேற்பட்டிருக்கும் தேவாரப் பதிகங்களில் ஒரு பாதியைப் பண்முறையிற் பாடச்சக்தியுடையவர்க ளாதல் வேண்டும்.

26. ஏழாவது வருஷத்தில் எஞ்சியுள்ள பாதியைத்தெளிந்து கற்றபின், திருவாசகம் திருப்புகழ் முதலியவைகளை உபாத்தியாயரிடமிருந்து வரன்முறையாகக்கற்றுப் பாடும் வன்மையோடு தேவார திருப்புகழ்களில் விசேட பாகமாக ஏற்படுகின்றவைகளுக்குப் பொருள் சொல்லும் சக்தியுடையவர்களாதல் வேண்டும்.

27. ஆறு ஏழு வருஷங்களுக்குத் தேவார திருவாசக சங்கீத பாடங்களுக்கும் தமிழ்ப்பாடங்களுக்கும் தனிப் பஞ்சிகை அவ்வப்பொழுது கொடுக்கப்படும்.

## 3. உபாத்தியாயர்கள் மாணவர்கட்குக் கற்பிக்க வேண்டிய அளவும் முறையும்.

28. தேவார உபாத்தியாயர் மாணவர்கட்குப் புதுப்பாடத்தில் ஒருநாளைக்குப் பதிகத்தில் இரண்டு மூன்று பாசுரங்கட்குக் குறையாமற் படிப்பித்தல்வேண்டும்.

29. அடுத்த தினத்தில் பழையபாடத்தைக் கேட்டபின்பு மேற்குறித்த முறைப்படி புதுப்பாடம் படிப்பித்தல் வேண்டும்.

30. பிள்ளைகளை நடக்கும் பதிகத்தைக் காகிதத்தில் எழுதிக்கொள்ளும்படி செய்தல்வேண்டும்.

31. ஓதிய பாசுரங்களைச்சிந்திப்பதற்கென்று மாணவர்கட் கேற்பட்ட காலத்தில் இவ்விருவராய்ச் சேர்ந்து சிந்தித்துத் தெளியும்படி செய்தல் வேண்டும்.

32. தேவார மாணவர்கள் தாம் கற்கும் வசனபாடங்களி லிருந்து ஒவ்வொரு நாளும் இருபது வரிக்குக்குறையாமல் விஷயங்களைப் பார்த்து நியதிபாய் எழுதும்படி செய்தல் வேண்டும்.

33. ஷை மாணவர்கள் தாம் பயிலும் ஒவ்வொரு பிரிவிலும் எந்தவிஷயத்தை எந்தவகையில் தெளிவாய்க் கற்றுப் பூர்த்தி பெறலாமோ அதற்குரிய வினு விடைக் கிரமங்களை அவ்வப் பாடங்களின் உபாத்தியாயர்கள் காட்டி, அவர்களைப் பயிற்றல் வேண்டும்.

34. உபாத்தியாயர்கள் நியமிக்கப்பட்ட காலநிர்ணயப்படி பாடங்களை நடத்தல் வேண்டும்.

35. உபாத்தியாயர்களுக்கும், மாணவர்களுக்கும் தினசரிக் குறிப்புக்கள் இருத்தல் வேண்டும்.

36. உபாத்தியாயர்களுக்கும்மாணவர்களுக்கும் விடுமுறைத்தினங்களின் குறிப்புத்தனியாய்க் கொடுக்கப்படும். பொதுவாக வேனிற்காலத்திற்கு 3 வாரமும், பிரதி மாசத்திலும் வரும் அமாவாசைபிரதமை பௌர்ணிமை பிரதமைகளும், தக்ஷிணாயனம் சங்கிராந்தி சிவராத்திரி தீபாவளி முதலிய புண்ணிய காலங்களும் பாடசாலே விடுமுறை நாட்களாகும்.

37. வேற்றூரிலிருந்து பாடசாலேக்குவரும் பெரியவர்களும் உள்ளூரிலிருந்து பாடசாலேக்குவரும் பெரியவர்களும் வெளியார்க்கு என்றுவைக்கப்பட்டிருக்கும் பார்வைப்புத்தகத்தில் தமது அபிப்பிராயத்தை எழுதலாம்.

38. தமிழ் தேவார பாடபஞ்சிகைப்படி வாரந்தோறும் அவ்வக்கிழமைகளில் முறையேகற்பிக்க வேண்டிய பாடங்களைக் கால நிர்ணயப்படி கற்பித்தல்வேண்டும்.

39. தேவாரத் தமிழ் உபாத்தியாயர்கள் தினந்தோறுங் கற்பித்த பாடங்களைத் தமது குறிப்புப் புத்தகத்திற் குறித்து வைத்தல் வேண்டும்.

40. 3 மாதத்துக்கொருமுறை நடக்கவேண்டிய பாடத்தொகுதியை வரன்முறை செய்துகொள்ளல் வேண்டும்.

41 ஒருமாதத்தில் 4 பதிகங்கட்குக் குறையாமல் மனப்பாடமாகவும் பண்முறையிற் பாடவும் செய்தல் வேண்டும.

42. செய்யுட் பாடத்தில் மாதத்தில் 30 பாட்டும் வசனத்தில் 30 பக்கமும் கணிதத்தில் 25 கணக்குகளும் கற்பித்தல் வேண்டும்.

43. திருவிழா (ஆனி மார்கழி) காலங்களில் தேவாரமாணவர்களும் வெளியூரிலிருந்து வருவாரும் தேவாராசிரியர் நியமனப்படி சாஸ்திரமுறையில் அப்போதைக் கப்போது ஏற்படுகின்ற பதிகங்களை நியதியாய் ஓதல்வேண்டும்.

44. முறையே இருதிருவிழாக் காலங்களிலும் ஓதற்குரிய பதிகங்கள் உபாத்தியாயரால் நியமனஞ்செய்து பிள்ளைகளால் சந்தேகமின்றிப் பத்து நாள் முன்னதாகவே மனப்பாடம் செய்யப்படுதல் வேண்டும்,

45. மேற்குறித்த ஆனி மார்கழி ஆகிய இருதிருவிழாக் காலங்களிலும், முறையே பஞ்சமூர்த்திகளும் காலை இரவு வீதிப்புறப்பாட்டுக் காலங்களில் அப்போதைக்கப்போது சந்நிதியில்ஏற்படக்கூடிய காலபேதத்தைத் தழுவி, தேவாரபாராயண ஆரம்பஸ்தலத்தையும் முடிவுஸ்தலத்தையும் தேவார உபாத்தியாயர் நிர்ணயித்தபடி கொண்டு ஷெ தேவாரபாராயண ஆரம்ப முடிவுகள் நடைபெறல் வேண்டும்.

46. நிகழும் குரோதன ௵ சித்திரை ௴ ஆரம்பத்திலேயே வெ. சா. தேவாரபாடசாலையில் முன்னிருக்கும் பதின்மரோடு புதுவருஷத்திற்கு மாணவர்கள் ஐவருக்குக் குறையாமல் சேர்த்தல்வேண்டும். அப்பதின்மருள்ளும் அவ்வக்காலத்தில் விட்டவர்கள் ஸ்தானத்தில் வேறு மாணவர்களையும் சேர்க்கப்படும்.

47. தேவார சங்கீத உபாத்தியாயர் சாதககாலத்தைத்தவிர்த்துத்தேவார பாடமான பிற்பாடு சங்கீத முறைப்படி சரளி

அலங்காரம், கீதம், வர்ணம், ஸ்வரஸாஹித்யம் முதலியவைகளைக் கால நிர்ணயங்கொண்டு வாரக் கிரமத்தில் சங்கீதபஞ்சிகையைத் தழுவி மாணவர்கட்குப் போதித்தல்வேண்டும்.

48. பிள்ளைகள் எப்பொழுதும் விபூதிருத்திராக்ஷம் தரிக்கவும், கல்வியை விருத்திபண்ணிக்கொண்டு வருதல்போலவே சைவாசாரங்களை விருத்திபண்ணவும் உபாத்தியாயர்கள் பயிற்றல் வேண்டும்.

---

## 4. உபாத்தியாயர்களும் பிறரும் மாணவர்களைப் பரீக்ஷிக்கும் முறையும் யோக்கியதாபத்திரமளித்தலும்.

49. ஆறுவது மாசத்திய பரீக்ஷையும் வருஷமுடிவிற் பரீக்ஷையும் ஈண்டுள்ளாராலும், வெளியேயுள்ள பண்முறை தெரிந்த தேவாரவித்துவான்களாலும், தமிழ்வித்துவான்களாலும் வினாப்பத்திரங்கள் கொடுக்கப்பட்டு நடைபெறல்வேண்டும்.

50. படிப்புமுடிந்து பாடசாலையைவிட்டுப்போகிற பிள்ளைகளுக்கு யோக்கியதாபத்திரம் அதிகாரிகள் கொடுத்தல் வேண்டும். அவர்களுடைய அட்வான்ஸையும் திருப்பிக்கொடுக்கப்படும்.

51. வருடந்தோறும் பிள்ளைகளுக்குத் தேவாரப்படிப்பிலும் தமிழ்ப்படிப்பிலும் அபிவிர்த்திக்குரிய மனவெழுச்சியின் பொருட்டு, அவர்கள் யோக்கியதையைப் பரீக்ஷித்து, முதன்மையாய்த் தேறினவர்களுக்குத் தக்கார்களாற் பரிசுங் கொடுப்பிக்கப்படும்.

---

## 5. ஸர்வ்வஜித் நிலையப் புத்தகசாலையும் அதன் உபயோகமும்.

52. இங்கே மாணவர்கட்கும் உபாத்தியாயர்கட்கும் அத்தியாவசியமாகிய தேவார திருவாசக முதலிய திருமுறைகள், சைவ புராணங்கள், இதிகாசங்கள், சித்தாந்த சாஸ்திரங்கள், சிற்றிலக்கிய பேரிலக்கியங்கள், சங்கீத நூல்கள், சம்ஸ்கிருத நூல்கள்,

சில பத்திரிகைகளை இவையடங்கிய சரஸ்வதி நிலயமென்னும் ஓர் புத்தகசாலை அமைத்தல்வேண்டும்.

53. அது பாடசாலையிலுள்ள, ஓர் உபாத்தியாயரால் பாதுகாக்கப்படல் வேண்டும.

54. பிள்ளைகள் தங்களுக்குள்ள ஒழிவு நேரங்களில் பலபுஸ்தகங்களிலுமுள்ள விஷயப் போக்கையும் சாரத்தையும் தெரிந்தவரையிற் பார்த்து உணர்ந்து கொள்ளல்வேண்டும்.

## 6 பக்தவிலாச சபையும் நிகழ்ச்சியும்.

55. இங்கே பக்தவிலாசசபையென்று ஓர்சபை ஏற்பட்டுப் பிள்ளைகட்கும் பிறர்க்கும் சைவசமயப்பற்றும், தெய்வபக்தியும், புண்ணிய நோக்கமும், நல்லொழுக்கமும் அபிவிர்த்தியாதற் பொருட்டுத்தக்காரால் ஸத்விஷயபோதனைப் பிரசங்கங்களும், பிள்ளைகளின் பேச்சுவல்லமைப் பழக்கத்தின் பொருட்டுப்பிள்ளைகளின் வியாசநடைப் பிரசங்கங்களும் மாதமொருமுறைக்குக் குறையாமல் நடைபெறல் வேண்டும்.

56. இதற்கு அக்கிராசனர் உப அக்கிராசனர் காரியதரிசி உபகாரியதரிசிகளையும் அமைத்தல்வேண்டும்.

57. இதன் வருஷவிசேஷக்கூட்டத்தில் இப்பாடசாலையின் அவ்வவ்வருஷ நிகழ்ச்சிகளையும் அபிவிர்த்தியையும் பரீக்ஷையிற் றேறினரையுந் தெரிவித்துத் தக்கார் முன்னிலையில் தக்காரைக் கொண்டு பிள்ளைகளுக்குப் பரிசு கொடுப்பித்தலும் பேருபந்நியாசமும் நடைபெறல் வேண்டும்.

சுபம்.

திருச்சிற்றம்பலம்.

சிவமயம்.

# சிதம்பரம் வெ. சா. தேவாரபாடசாலையின் 5-வருஷங்களுக்கு நியமித்த பாடங்கள்

## 1 தேவாரம்.

திருமுறைகண்ட புராணத்தில் 24-பண்ணாக வகுத்து 112-ஆகவிரிக்கப்பட்டகட்டளைகளுக்கு ஏற்புடைய பதிகங்களும், அகஸ்தியர் தேவாரத்திரட்டில் அடங்கிய பதிகங்களும், அற்புதப்பதிகங்களும், முக்கியஸ்தலங்களின் பதிகங்களுமாகிய 796 மொத்தப் பதிகங்களில், தெரிந்தெடுக்கப்பட்ட இன்றியமையாத பதிகங்கள். 200 அவையாவன:—

(பண்ணும் பதிக எண்ணும்.)

| | | ஞான. | நாவு. | சுந். |
|---|---|---|---|---|
| 1 பண் | நட்டபாடை. | 11 | 1 | 2 |
| 2 பண் | தக்கராகம் | 8 | 0 | 2 |
| 3 பண் | பழந்தக்கராகம் | 6 | 1 | 0 |
| 4 பண் | தக்கேசி | 4 | 0 | 8 |
| 5 பண் | குறிஞ்சி | 8 | 1 | 3 |
| 6 பண் | வியாழக்குறிஞ்சி | 7 | 0 | 0 |
| 7 பண் | மேகராகக்குறிஞ்சி | 4 | 0 | 0 |
| 8 பண் | இந்தளம் | 4 | 1 | 5 |
| 9 பண் | சீகாமரம் | 4 | 2 | 2 |
| 10 பண் | காந்தாரம் | 3 | 2 | 3 |
| 11 பண் | நட்டராகம் | 3 | 0 | 6 |
| 12 பண் | செவ்வழி | 2 | 0 | 0 |
| 13 பண் | காந்தாரபஞ்சமம் | 7 | 1 | 1 |
| 14 பண் | கொல்லி | 5 | 1 | 5 |
| 15 பண் | கௌசிகம் | 6 | 0 | 1 |
| 16 பண் | பஞ்சமம் | 1 | 0 | 1 |
| 17 பண் | சாதாரி | 11 | 1 | 0 |
| 18 பண் | புறநீர்மை | 1 | 0 | 3 |
| 19 பண் | அந்தாளிக்குறிஞ்சி | 1 | 0 | 0 |

| | | | | |
|---|---|---|---|---|
| 20 பண் | திருநேரிசைக்கொல்லி | 0 | 6 | 0 |
| பண் | திருவிருத்தம் | 0 | 7 | 0 |
| 21 பண் | திருக்குறுந்தொகை | 0 | 7 | 0 |
| 22 பண் | திருத்தாண்டகம் | 0 | 23 | 0 |
| 23 பண் | பழம் பஞ்சுரம் | 0 | 0 | 7 |
| 24 பண் | செந்துருத்தி | 0 | 0 | 1 |
| | ஆகபண் 24-க்குப் | 96 | 54 | 50 |

பதிகம் 200.

திருச்சிற்றம்பலம்.

## II திருவாசகமுதலிய திருமுறைகள்.

### I திருவாசகம்

1. நமச்சிவாயவாழ்க (அக 1)
2 தில்லைமூதூர் (அக 2)
3. அண்டப்பகுதி (அக 3)
4 நான்முகன் (அக 4)

பதிகம்.

5. ஆதியுமந்தமும் 1—20
6. மெய்தானரும்பி 1—10
7. பூவேறுகோன் 1—20
8. உடையாளுன் 1—10
9. மாறிநின்றென் 1—10
10. சுடர்பொற் 1—10
11 இந்திரியவய 1—10
12. குழைத்தால் 1—10
13. உம்பர்கட்கரசே 1—10
14. பூங்கமலத்து 1—3
15, முத்திநெறி 1—10

## III சங்கீதம்

I, 1. சரளிவரிசை 1–10
2. ஸ்தாயிவரிசை 1—5
3. ஜண்டைவரிசை 1—5
4. தாட்டிவரிசை 1—2

II. அலங்காரம் 1—7
[35 அலங்கார இலக்ஷணமும்]

III. பிள்ளையார்கீதம் 5
வேறு கீதம் 5

IV. வர்ணங்கள் 1—10

V. தியாகராஜர் கீர்த்தனை—
சுரசாகித்ய சகிதம் 10
சுரமில்லாமல் 10
தீக்ஷிதர் கீர்த்தனம் 5
பாரதிகீர்த்தனம் 1—20

VI, தெரிந்தெடுக்கப்பட்ட—
கர்த்தாஜன்யராகஸ்வரங்கள் 50.

II. திருவிசைப்பா

1. ஒளிவளர் 1- 11
2. உயர்கொடி 5
3. உறவாகிய 5
4. பவளபால் 5

III. திருப்பல்லாண்டு மன்னுக 1—13

IV. பெரியபுராணம் 20-செ

பதிகஉள்ளக்கிடை 50-செ

V. திருக்கோவையார் 10-செ

VI. திருப்புகழ் 20-பாட்டு

---

## 1-வருஷத்தில் நடக்கவேண்டிய பாடங்கள்

### I தேவாரம்.

1. கற்றாங்கெரி
2. ஆடினாய் நறு
3. அன்னம்பாலிக்கும்
4. பனைக்கை மும்மத
5. செஞ்சடை
6. பத்தனாய்
7. பாளையுடைக்கமுகு
8. கருநட்ட
9. அரியானை
10. மங்குன்மதிதவழு
11. மடித்தாடு
12. தோடுடைய
13. கூற்றாயினவாறு
14. பித்தாபிறை
15. மந்திரமாவது
16. துஞ்சலும்
17 காதலாகி
18. சொற்றுணை
19. மற்றுப்பற்றெனக்
20 ஆரூர் தில்லை
21. தில்லைச்சிற்றம்
22. காட்டூர் கடலே
23. ஒருருவாயினை
24. வரிபமறையார்
25. வடிவேறுதிரிசூலம்
26. மருவார் கொன்றை
27. பொடியுடை
28. அரவணையான்
29. அந்தணாளன்
30. பந்துசேர்
31. வேற்றாகிவிண்ணாகி
32. கொன்றுசெய்த
33. வேயுறுதோளி
34. குலம்பலம்பாவரு
35. தில்லைவாழந்தணர்
36. அந்தமுமாதியும்
37. நன்றுநாடொறும்
38. போகமார்த்த
39 பூவார்மலர்
40. வாழ்க அந்தணர்.

### 11 திருவாசக முதலிய அருட்பாக்கள்

1. திருவாசகம் நமச்சிவாயவாழ்க ( அக 1.)
2. ஆதியுமந்தமும் 1-20
3. மெய்தானரும்பி 1-10

4. திருவிசைப்பா—
ஒளிவளர் — 5. பாசுரம்
5. திருப்பல்லாண்டு — 4, பாசுரம்
6. பெரியபுராணம் — 5, பாட்டு
7. திருப்புகழ் — 4. பாட்டு
8. திருக்கோவையார் — 4. பாசுரம்

## III சங்கீதம்.

| | | |
|---|---|---|
| 1. சரளிவரிசை | 1–10 | } |
| 2. ஸ்தாயிவரிசை | 1–5 | } |
| 3. ஜண்டைவரிசை. | 1–5 | } |
| 4. தாட்டிவரிசை. | 1–2 | } |

---

## 2-ம் வருஷத்துப் பாடங்கள்

### I தேவாரம்.

1 உண்ணாமுலை
2 அங்கமும் வேதமும்
3 துணிவளர் திங்கள்
4 மறையுடையாய்
5 பூத்தேர்ந்தாயென
6 பொடிகொளுருவர்
7 பொன்னுமெய்ப்பொருளும்
8 ஆலந்தானுகந்து
9 வாசிதீரவே
10 காலைநன் மாமலர்
11 எற்றான் மறக்கேன்
12 மாதர்மடப்பிடி
13 அவ்வினைக் கிவ்வினை
14 புலனைந்தும்
15 நீறுசேர்வதோர்
16 சதுரம்மறை
17 சடையாயெனுமால்
18 மட்டிட்ட புன்னை
19 பிழையுளனபொறுத்திடுவ
20 பண்ணினேர் மொழி
21 சுண்ணவெண்சந்தனம்
22 என்னபுண்ணியம்
23 பொன்னார் மேனியன்
24 பொன்செய்தமேனி
25 நீளநினைந்து
26 கூனற்றிங்கள்
27 இடரினும்
28 பரவும் பரிசு
29 வன்னியு மத்தமும்
30 மானினேர்விழி
31 தம்மையே புகழ்ந்து
32 வானைக்காவில்
33 வீடலால
34 தானெனைமுன்
35 வானவர்கள்
36 வாளவரி
37 தலையே நீ வணங்காய்
38 மங்கையர்க்கரசி
39 கல்லூர்ப்பெருமணம்
40 ஒம்பினேன்.

## II திருவாசகம் முதலியன

| | | |
|---|---|---|
| 1 திருவாசகம் தில்லைமூதூர் என்ற அகவல் | | 1. |
| 2 ஷை பூவேறுகோனும் என்னும்பதிகம் | | 1—20 |
| 3 ஷை உடையாளுன்றன் | ,, | 1—10 |
| 4 திருவிசைப்பா | | 6—10 |
| 5 திருப்பல்லாண்டு | | 5—8 |
| 6 பெரியபுராணம் | 4 பாசுரம் | |
| 7 திருக்கோவையார் | 4 பாசுரம் | |
| 8 திருப்புகழ் | 4 பாசுரம் | |

## III சங்கீதம்

| | |
|---|---|
| 1. அலங்காரம் | 1—7 |
| 2. பிள்ளையார்கீதம் | 1—5 |
| 3 வேறு கீதம் | 5—,, |

---

## 3-ம் வருஷத்துப் பாடங்கள்.

### 1. தேவாரம்.

1 வண்டார் குழல்
2 மைம்மரு பூங்குழல்
3 துஞ்சவருவாரும்
4 மடையில்வாளை
5 நூலடைந்த
6 சொன்மாலை
7 எரியார்மழு
8 கங்கைவார்சடை
9 நல்லார்தீமேவு
10 சித்தந்தெளிவீர்
11 முத்துவிதானம்
12 பந்தத்தால்
13 எரிசையும்
14 ஒன்றுகொலாம்
15 நெய்யும் பாலும்
16 கண்காட்டு நுதலானும்
17 கள்ளார்ந்த பூங்
21 செண்டாடும்
22 தொண்டரஞ்சு
23 கொட்டமேகமழ்
24 மண்ணினல்லவண்ணம்
25 செய்யனேதிரு
26 காட்டுமாவது
27 இறையவனீசன்
28 கோழைமிடறு
29 விண்ணவர்தொழு
30 பரசுபாணியர்
31 வடிவுடைமழு
32 தொண்டரடித்தொழ
33 மாயிருஞாலம்
34 வேதியா
35 பொன்னார்திருவடிக்கு
36 கோவாய் முடுகி
37 மாசில்வீணை

18 எந்தையீசன் 38 பண்ணினேர்
19 மாதர்பிறைக் 39 நினைந்துருகு
20 இத்தனையாமாற்றை 40 எண்ணுகேன்

ii திருவாசக முதலியன.

1. திருவாசகம். அண்டப்பகுதி என்ற அகவல்
2. சுடர்பொற்கொன்றை 1—10
3. மாறிநின்றென்னை 1—10
4. திருவிசைப்பா. உயர்கொடி 1—4
5. திருப்பல்லாண்டு 9—11
6. பெரியபுராணம் 4–பாசுரம்
7. திருக்கோவையார் 4–பாசுரம்
8. திருப்புகழ் 4–பாசுரம்

சங்கீதம்.

1. வர்ணங்கள் 10
2. 35 அலங்காரலக்ஷணமும்.

---

## 4ம் வருஷத்துப் பாடங்கள்.

1. தேவாரம்.

1 பிறையணி படர்சடை 21 பாசமுங்கழிக்ககில்லா
2 வாழ்வாவது 22 உண்டாய்நஞ்சை
3 காரைகள் கூகைகள் 23 ஈன்றாளுமாய்
4 வைத்தனன்றனக்கே 24 ஆண்டானை
5 ஒடுங்கும்பிணிபிறவி 25 ஓசைபொலியெலாம்
6 தேவராயும் 26 எத்தாயர்
7 கழுதைகுங்குமம் 27 திருவேயென்
8 பவனமாய்ச்சோடை 28 உயிராவணமிருந்து
9 நன்றுடையானை 29 பொய்ம்மாயப் பெருங்கடல்
10 ஆடரவு 30 மாதினையோர்
11 மெய்த்தாறுசுவை 31 பாடவடியார்
12 ஏடுமலி 32 முளைத்தானை
13 சூலப்படை 33 விற்றூணொன்றில்லாத
14 மறைகளாயின 34 இருநிலனாய்

15 நம்பொருள் 35 அப்பனீ
16 அலைவளர் 36 நாமார்க்கும்
17. குருகுபாய் 37. கருமணியை
18. வேத வேள்வி 38. பத்திமையும்
19. திரிதருமாமணி 39. கொடுகுவெஞ்சிலை
20. அந்தியுநன் 40. மீளாவடிமை

11 திருவாசகமுதலியன.

1. திருவாசகம் நான்முகன்
[என்ற அகவல்.
2. இந்திரியவயமயங்கி 1—10
3. குழைத்தாற்பண்டை 1—10
4. திருவிசைப்பா. பவளமால்
[வரையை 1. 4–பாசுரம்
5. திருப்பல்லாண்டு 12. 13 ,,
6. பெரியபுராணம் 4. ,,
7. திருக்கோவையார் 4. ,,
8. திருப்புகழ் 4 ,,

III சங்கீதம்.

1. தியாகராஜர்கீர்த்தனை சுரசாகித்யமாக 10.
[சுரமில்லாமல் 10.
2. தீக்ஷிதர்கீர்த்தனை 5.
3. ஜீவசுரத்தில் 10.

---

## 5–ம் வருஷத்துப் பாடங்கள்.

I. தேவாரம்.

1. ஆலநீழலுகந்த 27. கல்லானிழல்
2. வரியமறையார் 28. நிறைவெண்டிங்கள்
3. வாடியவெண்டலை 29. தம்மானையறியாத
4. சிவனெனு 30. முதுவாயோரிகதற
5. வடந்திகழ் 31. சங்கமருமுன்கை
6. அடலேறமரும் 32. மருந்தவை.
7. குண்டைக்குறட்பூதம் 33. தளிரிள வளரொளி
8. பூணுணவதோர் 34. யாமாமா

9. பிடிநூற்பெரியோர்களும்
10. சாதலும் பிறத்தலும்
11. புற்றில்வாளரவு
12. அழுக்குமெய்கொடு

13. பிரமனூர் வேணுபுரம்
14. பாட்டும் பாடி
15. சுடுமணி

16 பூவியல் பொறிகுழல்
17. தலைக்குத்தலைமாலை
18. கோத்திட்டையும்
19. திருவுடையார்
20. காண்டலே கருத்தா

21. மாடமாளிகை
22. தளிரிளவளரன
23 மின்னுமாமேகங்கள்
24. கரையுங் கடலும்
25. சிம்மாந்து
26. எரிதரவளம்

35 வெள்ளிக்குழைத்து
36. தலையெலாம்
37. எங்கேயென்னை
38. அழனீரொழுகி
39. வெறிவிரவு
40 சித்தநீநினை

II. திருவாசகமுதலியன.

1. திருவாசகம் உம்பர்கட்கரசே [1–10
2. பூங்கமலத்தயன் 1—3
3. முத்திநெறி 1—10
4. திருவிசைப்பா பவளமால் [5—10).
5. பெரியபுராணம் 4-பாசுரம்
6, திருக்கோவையார் 4-பாசுரம்
7. திருப்புகழ் 4-பாசுரம்

111 சங்கீதம்.

1. கோபாலகிருஷ்ண பாரதி- [தமிழ்க்கிர்த்தனம் 20,
2. ஜீவஸ்வரம் 40.
3. தசவிதகமகம்.

---

உ

சிவமயம்.

சிதம்பரம் வெ. சா. தேவாரபாடசாலையில்

ஐந்து வருஷத்துக்கு

ஏற்படுத்திய

II. தமிழ்பாடங்களின் வரலாறு:—

---

1. வசனம். A. 1. இரண்டாம் பாலபாடம். முழுவதும்.
2. மூன்றும் பாலபாடம். ,,
3. நான்காம் பாலபாடம். ,,

| | | | |
|---|---|---|---|
| சைவசமய நூல்கள். | B. 1. முதற்சைவவினாவிடை. | | முழுவதும், |
| | 2. இரண்டாஞ்சைவவினாவிடை. | | ,, |
| | 3. பெரியபுராணவசனம். | | ,, |
| | 4. திருவிளையாடற்புராணவசனம். | | ,, |
| வசனமும் | C. 1. சிவாலயதரிசனவிதி. | | ,, |
| செய்யுளும், | 2. சைவசமயநெறியுரை. | | ,, |
| 11. இலக்கணம். | 1. இலக்கண வினா விடை, | | ,, |
| | 2. இலக்கணச்சுருக்கம். | | ,, |
| | 3. நன்னூல் மூலம். | | ,, |
| | 4. நன்னூற்காண்டிகை யுரை— | | (எழுத்ததிகாரம்.) |
| 111. இலக்கியம். | 1. நீதிவெண்பா | உரையுடன். | 1—100. |
| | 2. நல்வழி | ,, | 1—40. |
| | 3. நன்னெறி | ,, | 1—40. |
| | 4. வாக்குண்டாம் | ,, | 1—40. |
| | 5. நீதிநெறிவிளக்கம் | ,, | 1—100. |
| | 6. நால்வர் நான்மணிமாலை | ,, | 1—40. |
| | 7. பெரியநாயகி விருத்தம் | ,, | 1—11. |
| | 8. ஷெ கலித்துறை | ,, | 1—20. |
| | 9. பிக்ஷாடன நவமணிமாலை | ,, | 1—9. |
| | 10. சிதம்பரமும்மணிக்கோவை | ,, | 1—30. |
| | 11. நளவெண்பா | ,, | 1—200. |
| | 12. பழமொழி | ,, | 1—100. |
| | 13. நாலடியார் | ,, | 1—50. |
| | 14. மீனாக்ஷிபம்மைபிள்ளைத்தமிழ் | | 1—50. |
| | 15. திருவாரூர் நான்மணிமாலை | ,, | 1—40. |
| | 16. தாயுமானவர் பாடல் | ,, | 1—50. |
| | 17. திருக்கோவையார் | ,, | 1—50. |
| | 18. திருக்குறள் மூலம் அதிகாரம் | | 1—68. |
| | 19. ஷெ பொழிப்புரை | ,, | 1—38. |
| | 20. நிகண்டு | தொகுதி | 1-2-11. |

---

IV. கணிதம். நாணயமாற்று, பண்டமாற்று. வட்டிக்கணக்கு, முகத்தலளவை, நீட்டலளவைக்கணக்குகளும், மணக்கணக்குகளும், இன்றியமையாப் பிறகணிதங்களும்.

. வியாசம். வாசக பாடங்களினுள்ளனவும், மனோதர்மமான லெளகிக வைதிக விஷயங்களும்.

---

111. சமஸ்கிருதம்.

1. பாலபாடம்.
2. பண்டார்கார், 1 புத்தகம்.
3. சப்தம், சமாஸம்.
4. நீதி ஸ்லோகங்கள். 1-100.

---

## 1-ம் வருஷத்துப் பாடங்கள்.

1. இரண்டாம் பாலபாடம் (விஷயவிளக்கம்.)
2. மூன்றும் பாலபாடம் (நெட்டுரு.) முழுவதும்.
3. நான்காம் பாலபாடம் ,, 97—113. (நல்லொழுக்கம்.)
4. முதற்சைவவினவிடை ,, இயல் 1——6.
5. நீதிவெண்பா ,,பாட்டு 1—100.
6. இலக்கணவினவிடை ,, இயல் 1——3.
7. கணிதம். வாய்பாடுகளும் சாதாரண பெருக்கல் வகுத்தல்களும்.

---

## 2-ம்வருஷத்துப் பாடங்கள்.

1. நான்காம் பாலபாடம் (நெட்டுரு) பக், 1-150.
2. பெரிய புராண வசனம் நால்வர்சரித்திரம்.
3. முதற்சைவவினவிடை ,, முழுவதும்.
4. இரண்டாஞ் சைவவினவிடை ,, இயல் 1—-8.
5. இலக்கணவினவிடை ,, முழுவதும்.

6. இலக்கணச்சுருக்கம் ,, எழுத்ததிகாரம்.
7. நன்னூல் மூலம் ,, சூ, 1-100.
8. நல்வழி, நன்னெறி, வாக்குண்டாம் 1-120.
9. அறத்துப்பால் மூலம் ,, அதி 1—38.
10. கணிதம், பவுன், ஷிலிங், சம்பந்தமான பெருக்கல் வகுத்[தல்களும் பிறவும்.

## 3-ம் வருஷத்துப் பாடங்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1 | பெரியபுராணவசனம். (விஷயவிளக்கம்) | | முழுதும். |
| 2 | இரண்டாஞ்சைவவினவிடை (நெட்டுரு) | | ,, |
| 3 | இலக்கணச்சுருக்கம் | ,, | சொல்லதிகாரம் |
| 4 | நன்னூல் மூலம் | ,, | சூ-101—250 |
| 5 | நீதிநெறிவிளக்கம் | ,, | 1—100 |
| 6 | நால்வர் நான்மணிமாலை | நெட்டுரு | 1—40 |
| 7 | பெரியநாயகி விருத்தம் | ,, | 1—11 |
| 8 | ஷை கலித்துறை | ,, | 1—20 |
| 9 | பிக்ஷாடனநவமணிமாலை | ,, | 1—9 |
| 10 | நிகண்டு | ,, | 11 தொ-1—150 |
| 11 | குறள்-பொருட்பால் | ,, | அதி 1—35 |
| 12 | கணிதம் | | பலவினத்தும். |

## 4-ம் வருஷத்துப் பாடங்கள்.

| | | | |
|---|---|---|---|
| 1 | திருவிளையாடற்புராணவசனம் (விஷயவிளக்கம்) | | முழுதும் |
| 2 | சிவாலயதரிசனவிதி | நெட்டுரு | ,, |
| 3 | நளவெண்பா | ,, | 1—200 |
| 4 | சிதம்பரமும்மணிக்கோவை | ,, | 1—30 |
| 5 | பழமொழி | ,, | 1—50 |
| 6 | குறள் பொருட்பால் | ,, | முழுவதும். |

| | | |
|---|---|---|
| 7 நிகண்டு | ,, | 11-தொ-150-300 |
| 8 இலக்கணச்சுருக்கம் | ,, | முழுவதும், |
| 9 நன்னூல் மூலம் | ,, | ,, |
| 10 கணிதம் | பலவினத்தும். | |
| 11 வியாசம் | கதைக்சுருக்கம். | |

---

## 5-ம் வருஷத்துப் பாடங்கள்

| | | |
|---|---|---|
| 1 சைவசமய நெறியுரை | பக்கம், | 1—150 |
| 2 காண்டிகையுரை | | எழுத்ததிகாரம் |
| 3 மீனாக்ஷியம்மைபிள்ளைத்தமிழ் | | 1—50 |
| 4 திருவாரூர் நான்மணிமாலை | | 1—40 |
| 5 பழமொழி | | 51—100 |
| 6 நாலடியார் | | 1—50 |
| 7 அறத்துப்பால் பொழிப்புரை அதி | | 1—38 |
| 8 நிகண்டு | தொகுதி | 1—2 |
| 9 தாயுமானவர் பாடல் | | 1—50. |
| 10 திருக்கோவையார் பாடல் | | 1—50. |

11 வியாசம் கதைச்சுருக்கமும் பல விஷயங்களும்,

---



உ

சிவமயம்.

சிதம்பரம்.

# வெ. சா. பாடசாலை மாணவர்களின்,

## படன சிந்தன போஜனாதி

### காலநிர்ணயம்.

---

| | |
|---|---|
| காலை | |
| 5—6-30 | சங்கிதம் |
| 6-30—8-30 | ஸ்நானம் அனுஷ்டானம் காலை போஜனம் |
| 8-30—9-30 | பாடசிந்தனை. |
| 9-30—11 | தேவாரம் பழம்பாடம் ஒப்பித்தலும்-திருத்தமும். |
| 11—12 | தமிழ்ப்பாடம் |
| 12—1 | போஜனம். |
| மாலை | |
| 1—2 | காப்பி அல்லது புதுப்பாடம் எழுதல் |
| 2—3 | பாடசிந்தனை |
| 3—5 | தேவாரம் புதுப்பாடம் கற்பித்தல் |
| 5—6 | தமிழ்ப்பாடம் |
| 6—6-30 | அனுஷ்டானம் |
| இரவு | |
| 6-30—7-30 | கோயில் தேவாரபாராயணம் |
| 7-30—8-15 | போஜனம் |
| 8-15—9-15 | பாடம் வரப்பண்ணுதல் |

[குறிப்பு:-சனி புதன்களில் $6\frac{1}{2}$—$9\frac{1}{2}$ எண்ணெய் தேய்த்துக் கொள்ள விடுமுறை. மேல் $9\frac{1}{2}$–$10\frac{1}{2}$ தேவாரம் பழம்பாடம் சனிக்கிழமை கணிதம் அந்தந்த வாரத்துப் பழம்பாடமும்,

---

முற்றிற்று.

சுபம்.

இங்ஙனம்,

அ, ஸ்ரீநிவாஸவரதாசாரியார்.

வெ, சா, பாடசாலை மேல்பார்ப்போர்,